ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2476/09 - 2026 පෙබරවාරි මස 17 වැනි අඟහරුවාදා - 2026.02.17

2476/09 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 94125 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் மானெல்வத்த, பொலேகல்ல, களனியில் அமைந்துள்ளதுமான நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியுட் வோப் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிடெட் (NIIBS) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2025, செத்தெம்பர் 22 ஆந் திகதிய 2455/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான I ஆம் அட்டவணை, அட்டவணை I இன் 'நிபந்தனை (1) (ஆ)' இற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

(1) (ஆ) குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் பௌத்த கற்கைகளில் இளங்கலைமாணி (சிறப்பு) (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' ("S") அல்லது அதற்குச் சமமான தகைமைகள் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளாக அமைந்தொழுகுதல் வேண்டும்.

கலாநிதி **ஹரிணி அமரசூரிய,**
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2025, திசெம்பர் 31.

EOG 02 - 00137

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது